View metadata, citation and similar papers at core.ac.uk
brought to you by CORE
provided by IR South Eastern University of Sri Lanka



# மீள் குடியேற்றமும் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களும்: 1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவிலிருந்து வெளியேற்றப்பட்டமுஸ்லிம் மக்களை மையப்படுத்திய ஆய்வு

# RESETTLEMENT AND PROBLEM FACING BY MUSLIMS PEOPLE: STUDY BASED ON EXCLUSION OF MUSLIM PEOPLE FROM MULLAITIVU IN 1990

**N. Kirupananthan, R. Sukirtha**
Department of Political Science
South Eastern University of Sri Lanka
kirupakiru22@gmail.com, sukirtha144@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

ஒரு நாட்டில் இடம் பெறுகின்ற யுத்தமானது யுத்தகாலத்தின் போதும் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியிலும் அந் நாட்டு மக்களின் அரசியல், பொருளாதார, சமூக நல்லிணக்கத்திலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துவனவாக காணப்படுகின்றன. அதே போன்று தான் இலங்கையில் தமிழீழ விடுதலை புலிகளிற்கும் - இலங்கை அரசிற்கும் இடையில் இடம்பெற்ற இன மோதலானது பல்வேறு இழப்புக்களையும் வன்முறைகளையும் தாக்கங்களையும் இலங்கையில் வாழும் பல்லின சமூக மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. இவ் இனமோதலின் முக்கியமான நிகழ்வு இலங்கையில் சிறுபான்மையினரில் ஒரு கணிசமான பகுதியினரான இஸ்லாமியர்கள் மத்தியில் ஆறாத வடுவினை ஏற்படுத்தியுள்ளது. அதாவது தமிழீழ விடுதலைப்புலிகளின் தனி ஈழ போராட்டத்தின் போது 1990 களில் வடக்கு – கிழக்கு முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டமை ஆகும். இவர்கள் தமது சொந்த குடியிருப்புக்கள், உடமைகள், சொத்துக்கள், பொருளாதாரம் என்பவற்றினை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அதிலும் குறிப்பாக வடக்கில் முல்லைத்தீவு மாவட்ட மொத்த சனத்தொகையில் 5% மாக காணப்பட்ட முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு அவர்கள் சுமார் 20 வருட கால அகதி வாழ்வினை பெரும் சிரமங்களிற்கு மத்தியில் சிலாபம், புத்தளம், அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டு யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டு வடக்கில் மீள்குடியேற்றம் இடம்பெற்று வருகின்ற சூழ்நிலையில் முல்லைத்தீவு பகுதியிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் எவ்வாறான இடர் பாடுகளை சந்திக்கின்றார்கள் மேலும் நீண்ட காலத்தின் பின்னர் மீள் குடியேற்றப்பட்தினால் தமிழ் மற்றும் முஸ்லீம் சமூகங்களிடையே சமாதான மற்றும் நல்லிணக்கத்தன்மைகள் காணப்படுகின்றதா அத்துடன் மீண்டும் இப்பிரதேசத்தில் மீள்குடியேறுவதற்க்கு மக்கள் முன்வருகின்றார்களா? இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதில் அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களின் செயற்பாடு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது போன்ற பிரச்சினைகளை ஆராய்வதாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்விற்கான முதலாம் நிலைத்தரவுகள் நேர்காணல், வினாக்கொத்து, இலக்க குழு கலந்துரையாடல்கள் மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் பத்திரிகைகள், நூல்கள், இணையத்தளங்கள் ஊடாக திரட்டப்பட்டன. மேற்படி பெறப்பட்ட தகவர்களின் பகுப்பாய்வினூடாக ஊடாகசொந்த நிலங்களில் மீள் குடியேற்றப்பட்ட முஸ்லீம் மக்கள் பிரதானமாக அரசியல், பொருளாதார, கலாசார ரீதியான பல சாவல்களை எதிர்கொள்வதினை இனங்காணப்பட்டது.

***பிரதான சொற்பதங்கள்:*** *முஸ்லிம்கள், மீள்குடியேற்றம், பலவந்த வெளியேற்றம், இன மோதல்*

## அறிமுகம்

இலங்கையின் பல்லின சமூக அமைப்பினைக் கொண்ட ஒரு தேசிய நாடாகும். இங்கு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என மூவின சமூக மக்கள்

வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் வடமாகாணத்து முஸ்லிம்கள் அங்கு மிக நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியங்களுடன் வாழ்ந்து வந்தனர். வரலாற்றுக் காலத்திலிருந்து வட மாகாணத்தில் கடற்போக்குவரத்திலும் முத்துக்குளித்தலிலும் முஸ்லிம்கள் தான் முன்னிலையிலிருந்து வந்துள்ளனர். அதாவது வட முஸ்லீம்களின் மூதாதையர்கள் என நம்பப்படும் அரேபியர்கள் கி.மு காலத்திலிருந்து மன்னாரில் முத்துக்குழிப்பிலும் வர்த்தகத்திலும் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். குறிப்பாக இவர்கள் குதிரை மலை, மாதோட்டம், குடியிருப்பு, அநுராதபுரம் போன்ற பிரதேசங்களில் நிரந்தர குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்துள்ளதுடன் கி.பி 7ம் நூற்றாண்டில் வடமாகாணத்தில் முஸ்லிம்களின் எண்ணிக்கை நிரந்தரகுடியிருப்புக்கள், வர்த்தகம் என்பன அதிகரித்து காணப்பட்டன. இவ்வாறு மிக நீண்ட கால வரலாற்று பிண்ணனியுடன் வட மாகாணத்தில் முஸ்லிம்கள் தமிழர்கள் மிக நீண்ட காலமாக பரஸ்பர நம்பிக்கை நல்லிணக்கத்துடன் பொருளாதார ரீதியாக போட்டி பொறாமையற்று ஒரு இனத்தவரில் மற்ற இனத்தவர் பரஸ்பரம் தங்கிவாழ்ந்தனர்.

இவ்வாறு வாழ்ந்த வடக்கு முஸ்லிம்களின் வாழ்வாதாரத்தினை இலங்கையின் இன மோதல் கேள்விக்குள்ளாக்கியது. 1980 களிற்கு பின்னர் உக்கிரமடைந்த தமிழிழ விடுதலைப்புலிகளிற்கும் இலங்கை அரசிற்குமான இன மோதலினால் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டது போன்று முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டனர். 1990 களில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் வட மாகாணத்தில் பாரம்பரியமாக வாழ்ந்த முஸ்லிம்கள் எவ்விதமான நியாயமான காரணங்களுமின்றி உடனடியாக பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அதாவது இன மோதலின் போது முஸ்லிம்கள் கொள்கை ரீதியாகவும் செயலளவிலும் நடுநிலைமை வகித்தமையே இவர்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களை விட்டு வெளியேற காரணமாக அமைந்தது. அதாவது இன மோதல் தொடர்பாக முஸ்லிம்களின் கருத்தானது வட-கிழக்கு தமிழர்களதுமில்லை சிங்களவர்களினதுமில்லை அனைத்தையும் உள்ளடக்கிய இவ் நாடு எல்லா இனங்களினதும் தேசிய சொத்தாகும் என நடுநிலைத்தன்மை வகித்தனர்.

வடமாகாணத்தில் யாழ்ப்பாண முஸ்லிம்களே முதன்முதலாக வெளியேற்றப்பட்டனர். அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லீம்கள் 1990 ஒக்டோபர் மாதம் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களில் முல்லைத்தீவின் மொத்த சனத்தொகையில் 5% காணப்பட்ட முஸ்லீம்களும் தமிழிழ விடுதலைப்புலிகளினால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.
கரைதுறைப்பற்று உதவி அரசாங்க நிர்வாக பிரிவிற்குட்பட்ட இரண்டு வலயங்கள் உட்பட முஸ்லீம்கள் வாழ்ந்த 13 குடியிருப்பக்களிலிருந்து ஒக்டோபர் 24 பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அதில் முதலாவது வலயம் ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, தண்ணீரூற்று மற்றும் முல்லைத்தீவு நகரம் என்பனவாகும். முல்லைத்தீவு மாவட்டத்தின் 75% மானவர்கள் இவ்வலயத்தினை சேர்ந்தவர்கள். மற்றையது கல்லப்பாடு, நாலாம்கட்டை, உடுப்புக்குளம் ஆகிய முஸ்லிம் பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசமாகும்.

1990 ஒக்டோபர் 24 இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் சுமார் 20வருடங்களாக தமது குடியியல் உரிமை மறுக்கப்பட்டு அகதிகளாக பல்வேறு இன்னல்களிற்கு உட்பட்டு தமது வாழ்வினை நடாத்தி வந்துள்ள நிலையில் 2009 இல் இலங்கையின் நீண்ட கால மோதல் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு மீள்குடியேற்றம் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் முல்லைத்தீவிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் மீள்குடியேற்றமானது எந்தளவு தூரம் அவர்களை அடைந்துள்ளது. .(மஸ்தான் 2015) நல்லாட்சி அரசாங்கத்தில்

இவர்களது அரசியல் நிலை எவ்வாறு காணப்படுகின்றது. மீள்குடியேற்றத்தின் பின்னர் இவர்களது பொருளாதார நிலை மற்றும் சமூக நல்லிணக்கம் எவ்வாறு காணப்படுகின்றது போன்றன பிரதானமாக முஸ்லிம்கள் எதிர் கொள்ளும் சவாலாக காணப்படுவதனால் அவற்றினை ஆராய்வதாக இவ் ஆய்வானது காணப்பட்டது(மஸ்தான் 2015).

**ஆய்வுப் பிரச்சினை**

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்திற்குப் பின்னர் 2009ம் ஆண்டிலிருந்து மீள்குடியேற்ற செயற்பாடானது வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும் 1990ம் ஆண்டு வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களை இப்பிரதேசத்தில் மீண்டும் மீள்குடியேற்றப்பட்ட போது அவர்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர் கொள்கின்றார்கள். அதாவது மீள்குடியேற்றத்தின் பின்னர் இவ் மக்கள் தமது அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் எவ்வாறான இடர்பாடுகளை சந்திக்கின்றார்கள் மேலும் நீண்ட காலத்தின் பின்னர் மீள் குடியேற்றப்பட்டதினால் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடையே சமாதான மற்றும் நல்லிணக்கத்தன்மைகள் காணப்படுகின்றதா அத்துடன் மீண்டும் இப்பிரதேசத்தில் மீள்குடியேறுவதற்க்கு மக்கள் முன்வருகின்றார்களா? இவ்வாறான செயற்ப்பாடுகளை முன்னெடுத்து செல்வதில் அரசு மற்றும் அரசுசாரா நிறுவனங்களின் செயற்பாடு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது போன்ற பிரச்சினைகளை ஆராய்வதாக இவ் ஆய்வு காணப்பட்டது.

**ஆய்வின் நோக்கம்**

ஆய்வின் நோக்கமானது பின்வரும் நோக்கங்களை கொண்டு வடிமமைக்கப்படுகின்றது. மீள்குடியேற்றப்பட்ட பின்னர் அவ் மக்கள் அடிப்படை வசதிகளை பெற்றுக்கொள்வதில் எவ்வாறான இடர்பாடுகளை சந்திக்கின்றார்கள் என்பதனை கண்டறிவது பிரதான நோக்கமாகவும் மற்றும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடையில் உள்ள உறவு நிலை வரிசலடைந்து போவதற்கான சாத்திய கூறுகளை இனங்காணுதல் போன்றன இவ்வாய்வின் நோக்கமாகும்.
இவற்றினை தீர்து வைக்க அரசு மற்றும் அரசு சாராத நிறுவனங்கள் எவ்வாறான செயற்பாடுகளினை மேற்கொண்டுள்ளன போன்றவற்றினை ஆராய்வதாகவும் இவ்வாய்வானது காணப்படுகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வானது பண்பு ஆய்வாக காணப்படுகிறது. ஆய்வுக்கான தரவுகள் இரண்டு இலக்கு குழு கலந்துரையாடல்கள் மூலமும் மற்றும் மூன்று பேரிடம் நேர்காணலும் ஐம்பது வினாக்கொத்துக்கள் போன்ற முதலாம் நிலை தரவுகளிலும் நூல்கள், பத்திரிகைகள், மற்றும் இணையத்தள குறிப்புக்கள் போன்ற இரண்டாம் நிலை தரவுகளிலிலிருந்தும் பெறப்பட்டு பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

**பகுப்பாய்வுகளும் முடிவுகளும்**

முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து தாம் ''முஸ்லிம்கள்'' என்ற இனக்குழுவைச் சார்ந்தவர்கள் என்பதற்காக பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். இவ் வெளியேற்றத்தின் போது உடமைகள் பறிக்கப்பட்டதோடு வடக்கில் முஸ்லிம்களுக்கு வாழும் உரிமை இல்லை என்றும் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களினை தடுக்ககூடிய தேசிய சர்வதேச முயற்சிகள் எடுக்கப்படாமையும் வெளிேற்ற முயற்சி வெற்றி அளிக்க காரணமாகும். இவ்வாறு

வெளியேற்றப்பட்டு அகதி வாழ்க்கைக்கு தள்ளப்பட்ட முஸ்லிம் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வாழ்ந்ததுடன் 2009 ஆம் ஆண்டு யுத்தத்திற்கு பின்னர் தமது சொந்த நிலங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட முல்லைத்தீவு முஸ்லிம்கள் பல்வேறு அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக அடிப்படை வசதிகளினை பெற்றுக் கொள்வதில் சவால்களினை எதிர்கொள்கின்றார்கள் என்பது இவ் ஆய்வினூடாக அடையாளங்காணப்பட்டுள்ளன. அத்தகைய பிரச்சினைகளாக எமது ஆய்வில் இணங்காணப்பட்ட பிரச்சினைகளாக பின்வருவனவற்றினை அடையாளப்படுத்தமுடியும்.

**அரசியல் பிரச்சினைகள்**

- மீள்குடியேற்றப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட முஸ்லீம்கள் ஏனைய சமூகங்களைப் போன்று அரசியல் ரீதியான உரிமைகளைப் பெறுவதில் பல்வேறு சவால்களினை எதிர்கொள்கின்றனர். அதாவது முல்லைத்தீவில் மீள்குடியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தங்களை வாக்காளர்களாக பதிவு செய்து கொள்வதில் சவால்களை எதிர் கொள்கின்றனர்.
- அத்துடன் தமது அடிப்படை உரிமைகள் தொடர்பாக பேசுவதற்கு உரிய தலமைத்துமின்றிக் காணப்படுகின்றனர். ஏன் எனில் இப்பிரதேசத்தினை பொறுத்து இவர்கள் குறைந்த சனத்தொகையினராக காணப்படுகின்றமையினால் இவர்கள் சார்பில் பிரதிநிதிக்ள தெரிவாகின்றமை குறைந்த நிலையில் காணப்படுகின்றது.
- இவர்கள் எதிர் கொள்ளும் பிரதானமான அரசியல் சவாலாக காணப்படுவது அரசியல் ரீதியான வேறுபட்ட போக்கு. இங்கு வாழும் முஸ்லிம்கள் வேறுபட்ட தலைமைத்துவங்களின் கீழ் செயற்படுகின்றமையானது அவர்களது நலன்களினை பெற்றுக் கொள்வதில் ஒருவரிற்கு ஒருவர் தடையாக காணப்படுகின்றனர். ஒருவர் கொண்டு வரும் அபிவிருத்தியினை மற்றைய தரப்பினர் மறுக்கும் போக்கு காணப்படுகின்றது.
- தமிழ் கட்சிகளின் பாரபட்சமான செயற்பாடுகள் முஸ்லீம்களினை அரசியல் ரீதியாக புறம் ஒதுக்குவதாகவும் அவர்களது அடிப்படை உரிமைகளை பாதிப்பதாகவும் காணப்படுகிறது.
- யுத்தம் முடிவடைந்ததை தொடர்ந்து நாட்டில் நிலைமைகள் மாற்றம் அடைந்தன. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ், முஸ்லிம் மக்களை மீளக் குடியேற்றுவதற்கு ஏதுவான சூழல் ஏற்பட்டது. இங்கு தமிழ் மக்களை மீள்குடியேற்றத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்ட போதும் தமிழர்கள் மீது காட்டிய அக்கறையினை அரசாங்கமோ சர்வதேசமோ முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக காட்டவில்லை.
- 1990 களில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள் ஆரம்பத்தில் பெரிதாக கவனம் செலுத்தாமையும் அவ்விடயத்தினை போதிய அளவு சர்வதேச மயமாக்கமை இதனால் சர்வதேசத்தின் உதவி கிடைக்காமை.
- அரசாங்க நிறுவனங்களும் பாரபட்சமான போக்கினை கையாளுகின்றமையானது மீள்குடியேற்றப்பட்ட மக்களது தேவைகளை பூர்த்தி செய்வதில் தடையினை ஏற்படுத்துகின்றது.
- முழுமையாக குடியேறுவதற்காக நிலங்கள் இன்னும் விடுவிக்கப்படாமை. இதனால் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வாழ்ந்த பகுதிகளிலே வாழ வேண்டிய நிலை காணப்படுகிறதுஇ அதாவது 30 வருட இடம்பெயர்ந்த வாழ்க்கை காரணமாக அப்பிரதேசங்களில் தமது வாழ்வாதாரத்தினை அமைத்துக் கொண்டமை. அதிகரித்த சனத்தொகை காரணமாக காணிகள் போதாமை காணப்படுகின்றது.

**பொருளாதார பிரச்சினைகள்**

- இலங்கை பொருளாதாரத்தில் முதுகெலும்பாகக் காணப்படும் முஸ்லிம்கள் முல்லைத்தீவில் மீள்குடியேற்றப்பட்ட நிலையில் அவர்களது பொருளாதாரமானது விவசாயம் மற்றும் நந்திக்கடலை நம்பிய மீன்பிடி காணப்படுகிறது. எனினும் தமது பாரம்பரிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தடங்கல் நிலை காணப்படுவதுடன் அவர்களிற்கான ஊக்கப்படுத்தல்களும் மந்த நிலையிலே காணப்படுகின்றது. குறிப்பாக விவசாய நிலங்கள் போதியளவில் வழங்கப்படாமை.
- நந்திக்கடல் முல்லைத்தீவு மக்களின் மீன்பிடி தொழிலில் ஈடுபடுவோரின் முக்கியமான கடலாக காணப்பட்டது. 1990 களிற்கு முற்பட்ட காலத்தில் பாரம்பரிய உபகரணங்களினைப் பயன்படுத்தி மீன்பிடிக்கப்பட்டடையினால் அனைவரும் இலாபம் பெறக் கூடியதாக காணப்பட்டது. ஆனால் இன்று புதிய நவீன உபகரணங்கள் பயன்படுத்தி ஒரு சிலரே இலாபம் ஈட்டக்கூடியதாக காணப்படுவதனால் மீன்பிடியில் தங்கியிருந்த முஸ்லீம்கள் பாதிப்படைந்துள்ளனர்.
- அத்துடன் நந்திக்கடலில் 1990 களிற்கு முன்னர் ஆதிக்கமிக்கவர்களாக முஸ்லிம்கள் காணப்பட்டனர். ஆனால் இன்று நந்திக்கடலில் அதிக ஆதிக்கம் செலுத்துபவர்களாக தமிழ் மக்கள் காணப்படுகின்றமை நந்திக்கடலை நம்பியிருந்த முஸ்லிம்களை ஏமாற்றியுள்ளது.
- அத்துடன் தொழில் வழங்குவதிலும் பாரபட்சங்கள் காணப்படுகின்றன. அதாவது அரச பதவிகளில் முஸ்லிம்கள் காணப்படுகின்ற போதும் போதியளவு வழங்கப்படாமையினால் அவர்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்து வாழ்ந்த பகுதிகளில் தங்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.
- அடிப்படை வசதிகளினைப் பெறுவதில் குறிப்பாக சுத்தமான நீரினை பெறுவதில் பாரிய பிரச்சினைகள
- வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்ட போதிலும் அவை முழு மக்களுக்கும் வழங்கப்படவில்லை. ஒரு சில தகுதிகளின் அடிப்படையில் ஒருசிலரிற்கே வழங்கப்பட்டது.
- மீள்குடியேற்றப்பட்ட மக்களிற்கு வழங்கப்பட்ட காணிகளும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் 3 அல்லது 4 குடும்பங்களிற்கு பிரித்து வழங்கப்பட்டுள்ளமை.
- தற்காலிக வீடுகள் மற்றும் இந்திய வீட்டுத்திட்டம் மூலம் வழங்கப்பட்ட வீடுகளும் ஒரு சிலரிற்கே சில தகுதிகளின் அடிப்படையிலே வழங்கப்பட்டது. இது இவர்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது.

**கலாச்சாரப் பிரச்சினைகள் சமூக நல்லிணக்கம்:**

- தமது சமயத்தினை சுதந்திரமாக பின்னற்ற முடியாத நிலை இவர்கள் மத்தியில் விரிசல் நிலையினை தோற்றிவித்துள்ளன. இதன் காரணமாக இன முரண்பாடுகள் தோன்றுவதற்கான சாத்திய கூறுகளும் காணப்படுகின்றது
- 1990 களிற்கு முன்னரும் இன்றும் முஸ்லிம்- தமிழ் உறவு நிலையானது பரஸ்பர நம்பிக்கை கௌரவம் ஒற்றுமை என்ற அடிப்படையில் காணப்படுகிறது.
- இருப்பினும் இரு சமூகங்களிற்கு இடையில் மோதலினை ஏற்படுத்தி அதனை சாதகமாக பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடும் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளினால் தமிழ்- முஸ்லிம் மக்களடையே ஒரு தவறான மனவோட்டத்தினை ஏற்படுத்துகின்றது.
- 1990 களிற்கு முன்னரும் இன்றும் முஸ்லிம்- தமிழ் உறவு நிலையானது பரஸ்பர நம்பிக்கை கௌரவம் ஒற்றுமை என்ற அடிப்படையில்

காணப்படுகிறது. எனினும் இன்று தத்தம் சமய அடையாளங்களையும் பேண முற்படுதல் மற்றும் கலாச்சார ரீதியான இடைவினைகள் மற்றும் தமது சமயத்தினை சுதந்திரமாக பின்னற்ற முடியாத நிலை இவர்கள் மத்தியில் விரிசல் நிலையினை தோற்றிவித்துள்ளன.

- 1990 களில் முற்பட்ட காலத்தில் நல்லதொரு புரிந்துணர்வும் ஒரு மதத்தினை பற்றி மற்றைய மதத்தினர் அறிந்து கொண்டு ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். எனினும் இன்று தவறான புரிந்துணர்வுகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத நிலை போன்றன காணப்படுகின்றமையானது இனமுறுகலினை ஏற்படுத்தக் கூடியதாக காணப்படுகிறது.

**அரச மற்றும் அரச சாரா அமைப்புக்களின் செயற்பாடுகள்**

- மிகமுக்கியமாக குறிப்பிடவேண்டிய விடயம் அரசு மற்றும் அரச சாரா நிறுவனங்கள் பெரும்பாலும் 2009 ஆண்டு யுத்தத்தின் போது இடம்பெயர்ந்தவர்கள் தொடர்பாகவே அதிகளவு கரிசணை கொள்வதனால் அதற்கு முன்னர் இடம்பெயர்ந்த முஸ்லிம்களது மீள்குடியேற்றம் தொடர்பாக அதிகளவு அக்கறை காட்டவில்லை.
- அரசு மீள்குடியேற்றம் தொடர்பாக தனியார் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களும் 2009 யுத்தத்தின் போது பாதிக்கப்பட்டவர்களினை மையப்படுத்தியதாக காணப்பட்டது.
- முல்லைத்தீவில் காணப்படும் அரசாங்க நிறுவனங்களில் பணியாற்றும் அரசாங்க அதிகாரிகளும் முஸ்லிம்களது மீள்குடியேற்றம் தொடர்பில் கரிசணை கொள்ளாமை.
- இவர்களிற்கு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட 25000 உதவு தொகையை தவிர வேறு உதவிகள் வழங்காமை.
- வீட்டுத்திட்டம் மற்றும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்ட போதிலும் புள்ளி அடிப்படையில் ஒரு சிலரிற்கு மட்டுமே வழங்கப்பட்டது.
- அரசு சாரா நிறுவனங்களினதும் மற்றும் சர்வதேச உதவிகளும் இவர்களிற்கு குறைந்த அளவிலே வழங்கப்பட்டது.
- மீள்குடியேற்றப்பட்ட மக்களிற்கான முஸ்லிம் பகுதிகளிற்கு மின்சார வசதிகள் மற்றும் பாதைகள் போடப்படாமை.
- விவசாய காணிகள் 1962 களிற்கு பின் வழங்கப்படாமையும் சந்தை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமை.
- போதியளவு சந்தை பேட்டைகள் அமைக்கப்படாமை.

**முடிவுரை**

இலங்கையின் இன மோதல் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட போதும் அதன் வடுக்கள் அனைத்து சமூகங்கள் மத்தியிலும் இழப்புக்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளன. 1990 களில் முல்லைத்தீவு உட்பட வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் இன்றைய சூழ் நிலையிலும் அவலம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டு பல இன்னல்களினை சந்தித்த இவர்கள் 2009 ஆம் ஆண்டு யுத்தத்த வெற்றியின் பின்னர் மீள்குடியேற்றப்படுவதிலும் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

எனவே இவர்களது மிக முக்கிய வேண்டுகோளான விட்டுத்திட்ட வசதிகள் மற்றும் அவர்களுக்கான காணிகளின் பற்றகாக்குறை என்பவற்றினை தீர்ப்பதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுப்பதுடன் குடி நீர் பிரச்சினைகள் தொடர்பாகவும் உரிய தீர்வு வழங்கப்படவேண்டும். என்பதோடு அரசியல் ரீதியான விடயங்கள் தொடர்பாக இவர்களிற்கு உத்தரவாதத்தினை வழங்க வேண்டும். இன நல்லிணக்கத்தினை கட்டியெழுப்புவதுடன் இதற்கான நிகழ்ச்சித் திட்டங்களினையும் மேற்கொள்ளதல் வேண்டும். அத்துடன் பொருளாதார ரீதியான

ஊக்கப்படுத்தல்கள் வழங்குவதுடன் அவர்களுக்கான நஷ்ட ஈடுகள் வழங்கப்பட்டு அவர்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழியமைத்துக்கொடுப்பது அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பொறுப்பாகும்.

**உசாத்துணைகள்**

1. Noorul Hagu M.M.M ., 2002. "சிறுபாண்மையினர் சில அவதானங்கள்". மருதன் கலை இலக்கிய வட்டம்.
2. ஜோர்ஜ் ப்ரெக்ஸ்., 2004. "பல்வகமையினை கையாளுதல்". நெதர்லாந்து சர்வதேச உறவுகள் நிலையம்.
3. விக்டர்., 1997. "முஸ்லிம் தேசமும் எதிர்காலமும". ரெக்னோ பரிண்ட்.
முஸ்தபா முகம்மது மஸ்தான்., 2015. "வடக்கு முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றம்". முசலி இளைஞர் ஒன்றியம்.
4. முகமது சமீம். அ., 2004. "ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்". 2004, றிசானா பப்ளிஷர்ஸ்.
5. நூறுல்ஹக். எம். எம். எம், "தீவும் தீர்வுகளும்", 1998, மருதன் கலை இலக்கிய வட்டம்.
6. லயனல் குருகே., 2004. "இலங்கையின் தேசிய இனத்துவப் பிரச்சினைகளும், அதற்க்கான தீர்வுகளும்", மாற்றுக் கொள்கைக்கான நிலையம்.
7. றுசாக் முகமட் அலி., 2005. "இலங்கையின் இனப்பிரச்சினைத்தீர்வும் முஸ்லீம்களும". ஈரம் வெளியீட்டகம் ஒலுவில்.
8. மனோகரன்.ஆ.க., 2008. "இலங்கையின் இனத்துவ மோதல்களும் சமாதான முன்னெடுப்புக்களும் ஒரு வரலாற்றுப் பார்வை" 1948-2007. தி பார்க்கர் இராயபேட்டை,சென்னை.
9. நடேசன்.ஜி., 2000. "இலங்கை இன முரண்பாடுகளின் வரலாறு ஒரு ஆவணப் பதிப்பு". அபிராமி விளம்பர நிறுவனம் மட்டக்களப்பு.
10. "Srilanka's Muslim IDPs 25 years on"
www.irinnews.org/report accessed on 27.07 2016
11.வீரகேசரி. 12.07. 2016
12. சுடர் ஒளி. 27.06. 2016